# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம்

---

*[1990 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

*1990, நவெம்பர் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறை நிரப்பியாக வெளியிடப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : ரூபா 1.00

## 1990 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம்

[1990, நவம்பர் மாதம் 12 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 05/90
2050

### 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தில் IVஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.

2. பாகம் IV ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய பாகமானது இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது (இதனகத்துப்பின்னர் "மூதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் பாகம் IVஅ என்றவாறு பயனுறுதலும் வேண்டும் :—

"பாகம் IV அ

இலக்கமிடப்பட்ட கணக்குகள்

இலக்கமிடப்பட்ட கணக்குகளைத் தொழிற்படுத்துவதற்கான அதிகாரம்.

34 அ. (1) பணச் சபையானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஆக்கப்பட்ட கட்டளைமூலம், வதிவற்றவர்களான அல்லது வெளிநாட்டுப் பிரசைகளாகவுள்ள வாடிக்கையாளர்களின் சார்பில் இலக்கமிடப்பட்ட வங்கித்தொழிற் கணக்குகளினைத் தொழிற்படுத்துவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றை அங்கீகரிக்கலாம்.

(2) இப்பாகத்தின்கீழ் வெளிநாட்டுப் பிரசைகளாகவுள்ள அல்லது வதிவற்றவர்களாகவுள்ள வாடிக்கையாளர்களுக்கு பணச் சபையால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்படும் இலக்கமிடப்பட்ட கணக்கு வசதிகளானவை, நடைமுறைக் கணக்குகள், வைப்புக் கணக்குகள் அத்துடன் சேமிப்புக் கணக்குகள் என்பவற்றிற்கு நீடிக்கப்படலாம்; ஆனால் கடன் வசதிகளுக்கு நீடிக்கப்படுதல் ஆகாது.

(3) இப்பாகத்தின்கீழ் பணச்சபையால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் இலக்கமிடப்பட்ட கணக்கில் வைப்பிலிடுவதற்கென ஏற்றுக்கொள்ளப்பட்ட பணங்கள் யாவும் பணச் சபையால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வெளிநாட்டு நாணயங்களில் இருத்தல் வேண்டும்.

(4) இப்பாகத்தின்கீழ் பணச்சபையால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்டவோர் இலக்கமிடப்பட்ட கணக்கின் சொந்தக்காரரை அத்தகைய வங்கியின் பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வங்கியின் அத்தகைய சிரேட்ட அலுவலர்கள் மட்டுமே அறியக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

இரகசியம் பேணல்.

34ஆ. (1) வாடிக்கையாளரொருவரின் சார்பில் ஓர் இலக்கமிடப்பட்ட கணக்கைத் தொழிற்படுத்தும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் ஒவ்வோர் அலுவலரும் அத்துடன் அத்தகைய கணக்குத் தொடர்பில் அத்தகைய வங்கியின் பதிவேடுகளை, பதிவுச் சுவடிகளை, கடிதத் தொடர்புகளை அல்லது ஏதேனும் பிற பொருளை அவரது தகுதி அல்லது பதவி காரணமாக அணுகுவதற்கு வழி உள்ள ஒவ்வோர் ஆளும், கணக்கு எந்த வாடிக்கையாளர் தொடர்பிலானதோ அந்த வாடிக்கையாளரின் நலன்களுக்காக, அதனகத்துள்ள பொருளடக்கங்கள் தொடர்பில் முழுமையான இரகசியத்தைப் பேணுதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின் கீழ் பணச்சபையால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று ஒரு வாடிக்கையாளரின் சார்பில் இலக்கமிடப்பட்ட ஒரு கணக்கைத் திறக்குமிடத்து—

(அ) அத்தகைய இலக்கமிடப்பட்ட கணக்கின் சொந்தக்காரர் அவ்வாறு செய்வதற்கு அவரது அனுமதியைக் கொடுத்தால்; அல்லது

(ஆ) அத்தகைய இலக்கமிடப்பட்ட கணக்குத் தொடர்பில் எழுந்த ஒரு வங்கித்தொழிற் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அத்தகைய இலக்கமிடப்பட்ட கணக்கின் சொந்தக்காரரால் அல்லது அவருக்கெதிராக அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கியால் அல்லது அதற்கெதிராகச் சட்ட நடவடிக்கைகள் தொடரப்பட்டால், அல்லது

(இ) அவர்—

(i) போதைப் பொருட்கள் அல்லது அச்சுறுத்தலின் பேரில் ஊர்திகளைத் திசை திருப்புதல் மீதான சருவதேச சமவாயமொன்றைப் பயனுறுத்தும் ஏதேனும்

சட்டத்தின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட எவையேனும் குற்றவியல் நடவடிக்கைகளில் அச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால்;

(ii) அத்தகைய கணக்கிலுள்ள பணங்கள் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தவறொன்றாக அமையும் ஏதேனும் செயலை முன்னேற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன அல்லது பயன்படுத்தப்படுகின்றன என்ற காரணத்தின் மீது அதற்கான விண்ணப்பமொன்றின்மீது ஆக்கப்பட்ட உயர்நீதிமன்றக் கட்டளையொன்றினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்டால்,

அல்லாமல் இலக்கமிடப்பட்ட கணக்கின் சொந்தக்காரரது ஆளடையாளம் முற்றாக அந்தரங்கமாக வைத்திருக்கப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் ஒவ்வோர் அலுவலரும் அத்துடன் உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மற்ற ஒவ்வோர் ஆளும், அத்தகைய இலக்கமிடப்பட்ட கணக்கின் சொந்தக்காரரது பெயர் அல்லது ஆளடையாளம் சம்பந்தமான எத்தன்மையதுமான ஏதேனும் தகவலை எவரேனும் தனியாளுக்கு, கூட்டுத்தாபனத்திற்கு, வங்கிக்கு, நீதிமன்றத்திற்கு, நிறுவனத்திற்கு, கூறுக்கு, திணைக்களத்திற்கு, அலுவலருக்கு, முகவருக்கு, இலங்கை அரசாங்கத்தின் அல்லது வேறு ஏதேனும் அரசாங்கத்தின் பிரதிநிதிக்கு அல்லது வேறு எவரேனும் சட்ட ஆளுக்கு அல்லது இயற்கை ஆளுக்கு, நீதித்துறை அல்லது இராணுவ அதிகாரிக்குக் கொடுக்கவோ வெளிப்படுத்தவோ அல்லது பகிரங்கப்படுத்தவோ கூடாது.

ஒழுங்குவிதிகள்.

34இ. (1) பிரிவு 20 அல்லது பிரிவு 21 இன் நோக்கங்களுக்காக உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியின் இலக்கமிடப்பட்ட கணக்குகளைப் பேணுதல் தொடர்பாகவும், வைப்புப் பொறுப்புக்களைக் கணக்கிடு செய்வதற்காக அத்தகைய கணக்குகளில் இருக்கும் பணத்தை உள்ளடக்குவது அல்லது தவிர்ப்பது உட்பட, அத்தகைய கணக்குகள் மேல் விதிக்கக்கூடிய மட்டுப்பாடுகள் தொடர்பாகவும் அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

பொருள் கோடல்.

34ஈ. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக—

(i) "வெளிநாட்டுப் பிரசை" என்ற சொல்லமைப்பு இலங்கைப் பிரசை அல்லாத ஓர் ஆள் அல்லது இலங்கைப் பிரசையொருவராகவும் அத்துடன் வேறு ஏதேனும் நாட்டினது பிரசையொருவராகவும் உள்ளவரானவோர் ஆள் எனப் பொருளாகும்;

(ii) "வதிவற்றவர்" என்பது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(iii) "இலக்கமிடப்பட்ட கணக்கு" என்ற சொல் அமைப்பு, இப்பாகத்தின்கீழ் பணச்சபையால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியில் திறக்கப்பட்டதும் ஓர் இலக்கத்தினால், குறியீட்டுச் சொல்லினால் அல்லது பணச்சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வழியினால் மட்டுமே அடையாளம் காணப்படுகின்றதுமான ஒரு கணக்கு எனப் பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் :—

(1அ) பிரிவு 34ஆ என்பதன் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய தவறு அறிவுடன் அல்லது வேண்டுமென்றே அல்லது அது வேறு எவரேனும் ஆளுக்குச் சேதம் அல்லது தீங்கு விளைவிக்கும் என நம்புவதற்கான காரணத்துடன் புரியப்பட்டவிடத்து, ஐந்து ஆண்டுகளுக்

குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதிக்குக் கடூழிய மறியற்றண்டனைக்கும் அத்துடன் பத்து இலட்சம் ரூபா அல்லது அத்தகைய கணக்கில் இருப்பதாகப் பகிரங்கப்படுத்தப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட தொகையின் இருமடங்கு என்பவற்றில் எந்தத் தொகை கூடியதோ அந்தத் தொகையிலான குற்றப்பணம் ஒன்றை இலங்கை நாணயத்தில் செலுத்துவதற்கும் ஆளாதல் வேண்டும்.''; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் " (1) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, " (1) ஆம் உட்பிரிவின் அல்லது (1அ) என்னும் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.